# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2000 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம்

---

(2000, யூலை மாதம் 27 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

2000, யூலை மாதம் 28 ஆந் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 01, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 4.00** **தபாற் செலவு : ரூபா 3.50**

# 2000 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம்

[2000 ஆம் ஆண்டு யூலை மாதம் 27 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.- ஓ. 15/98

## 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 2000 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 71 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தின் 71 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :—

"(இ) வங்கியானது —

(i) ஆரம்பச் சொந்தக்காரரால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் விடயத்தில், ஆரம்பச் சொந்தக்காரரினதும் அத்துடன் அவர் எந்தக் குடும்பத்தின் தலைவராக இருக்கின்றாரோ அந்தக் குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களினதும் ; அல்லது

(ii) ஆரம்பச் சொந்தக்காரரின், வாழ்க்கைத் துணையால் அல்லது எவரேனும் பிற்சந்ததியினரால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் விடயத்தில், ஆரம்பச் சொந்தக்காரரின் அத்தகைய வாழ்க்கைத் துணையினதும் அத்துடன் ஏனைய பிற்சந்ததியினர்களதும்,

விடயத்திற்கேற்ப அத்தகைய ஆரம்பச் சொந்தக் காரரால், வாழ்க்கைத் துணையால் அல்லது பிற்சந்ததியால் எந்தத் தேதியன்று விண்ணப்பம் செய்யப்பட்டதோ அந்தத் தேதிக்கு நேர்முந்திய மூன்றாண்டுகளுக்கான வருமானவரி விதிப்பனவு தொடர்பிலான எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கணிப்பிடப்பட்ட ஆண்டுச் சராசரி நியதிச் சட்ட வருமானம், ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சவில்லை எனத் திருப்திப்பட்டாலன்றி";

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(3அ) மூன்றாம் உட்பிரிவின்கீழ் தீர்மானமொன்றைச் செய்யும் நோக்கங்களுக்கென வங்கியானது, வங்கியால் நியமிக்கப்பட்ட விசாரணை அலுவலரைக்கொண்டு விண்ணப்பத்தைப் பற்றிய விசாரணையொன்றை நடத்தச் செய்வித்தல் வேண்டும். வங்கியால் நியமிக்கப்பட்ட விசாரணை அலுவலரொருவர், விண்ணப்பம் எந்த ஆதனங்கள் தொடர்பிலானதோ அந்த ஆதனங்களின் சொந்தக்காரருக்கும் விண்ணப்பம் செய்யும் ஆளுக்கும் நேரிலோ அல்லது அதன்பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட முகவர் ஒருவரின் மூலமோ தம்பக்க வழக்கை எடுத்துரைக்கும் வாய்ப்பொன்றை அளித்தல் வேண்டும், என்பதுடன் அவர்,

(அ) கட்டளை விட்டழைப்பதற்கும் சாட்சிகளின் வருகையை கட்டாயப்படுத்துவதற்கும் ;

(ஆ) ஆவணங்கள் முன்வைக்கப்படுவதைக் கட்டாயப் படுத்துவதற்கும் ; அத்துடன்

(இ) சாட்சிகளுக்கு சத்தியத்தை அல்லது உறுதி யுரையை எடுத்தோதுவிப்பதற்கும்,

மாவட்ட நீதிமன்றமொன்றிற்குள்ள எல்லாத் தத்துவங்களையும் கொண்டிருத்தலும் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

3. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.